முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம்,
பொதுப்பணித்துறை, சேப்பாக்கம், சென்னை-5.

@@@@

முன்னிலை: பொறி. ச. மணிவண்ணன், எம்.இ.,
முதன்மை தலைமைப் பொறியாளர்,
மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) (மு.கூ./பொ)
பொ.ப.து., சேப்பாக்கம், சென்னை-5.

செயல்முறை ஆணை எண் - எஸ்5 (2) / 005341 / 2025 / நாள் 08.01.2025

பொருள் : பணியமைப்பு - த.நா.அ.ப.தொகுதி-பொ.ப.து - தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட ஒருங்கினணந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV - இளநிலை உதவியாளர் தேர்வு அடிப்படையில் பணிநியமனம் - இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து தகுதிகாண்பருவம் துவக்க ஆணை வழங்குதல் - தொடர்பாக.

பார்வை:
1. செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-3 அவர்களின் க.எண்.1970/ PSD-D2/ 2023, நாள்.31.08.2023
2. மு.த.பொ. (ம) த.பொ.(பொது), நீ.வ.து சென்னை செ.மு.ஆ.எண்.எஸ்3(3)/35336/2023/நாள்.22.09.2023.
3. மு.த.பொ.மற்றும் த.பொ.(பொது), பொ.ப.து சென்னை-5 செ.மு.ஆ.எண்.எஸ்2(1)/022209/2023/நாள்.30.11.2023.
4. இவ்வலுவலக செ.மு.ஆ.எண்.எஸ்5(3)/026477/2023 நாள் 01.12.2023

@@@@

பார்வை 1-ல் காணும் செயலர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடிதத்தின் படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 24.07.2022 அன்று நடத்தப்பட்ட ஒருங்கிணைந்த குடிமைப் பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு பார்வை 2-ல் காணும் செயல்முறை ஆணையின் வாயிலாக பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு பார்வை 3 மற்றும் 4 -ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணைகளின்படி இவ்வலுவலகத்தில் காலியாக உள்ள இளநிலை உதவியாளர் பணியிடத்தில் பணிபுரிந்த திரு.இரா.பாலாஜிராம், இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்யும் பொருட்டு, தனியரின் பணிப்பதிவேட்டை ஆய்வு செய்ததில் அதிலுள்ள பதிவுகளின்படி, தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை மற்றும் தனியருக்கு எந்தவித தண்டனையும் வழங்கப்படவில்லை.

| வ. எண். | தேர்வாணைய வ.எண். | பெயர் | பிறந்த தேதி | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன் முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|---|
| 1. | 9 | திரு.இரா. பாலாஜிராம் | 26.03.1987 | 11.12.2023 முற்பகல் | 11.12.2023 முற்பகல் |

/2/

எனவே, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம் 2016 (த.நா.ப. சட்டம் 14/2016) பொது விதி 28 (1) து.பி.(1),(2) பிரிவு 17-ன்படி தனியர் பணியேற்ற நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்வதற்கான ஆணையும், மேலும் பணிவரன்முறைப்படுத்தப்படும் நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டுகால தொடர்பணியில் இரண்டாண்டுகால தகுதிகாண் பருவம் துவக்கியும் ஆணை வழங்கப்படுகிறது.

மேற்படி நாளிலிருந்து தொடர்ச்சியான மூன்றாண்டு காலத்திற்குள் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவம் நிறைவு செய்ய வேண்டும் எனவும், தகுதிகாண் பருவம் நிறைவு செய்யும் முன் பவானிசாகர் அரசு பயிற்சி நிலையத்தால் நடத்தப்படும் பயிற்சி மற்றும் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தகுதிகாண் பருவக் காலத்தில் தற்செயல் விடுப்பு தவிர்த்து ஏனைய பிற விடுப்புகள் துய்த்தால் தகுதிகாண் பருவம் தள்ளிப்போகும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவரது பணிநியமனம் மற்றும் பணிவரன்முறையானது, சென்னை உயர்நீதிமன்றம் சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகளுக்காக தொகுதி IV தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்குகளில் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் இவ்வாணை வழங்கப்படுகிறது.

ஒப்பம்/- ச. மணிவண்ணன்
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது)(மு.கூ./பொ)

பெறுநர்

திரு.இரா. பாலாஜிராம்
இளநிலை உதவியாளர், இவ்வலுவலகம்.

நகல்: கண்காணிப்பாளர்-நிர்வாகப் பிரிவு-2 மற்றும் நிர்வாகப் பிரிவு-4, இவ்வலுவலகம்.
நகல்: இருப்புக் கோப்பு.

ஆட்சி அலுவலர்
முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும்
தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம்
பொபது, சேப்பாக்கம், சென்னை

8.1.25